உ

கடவுள் துணை.

பட்டணத்துப் பிள்ளையார்,

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டும்

உடற்கூற்றுவண்ணமும்

இன்னும் சித்திரப்பாடல்
அடங்கியிருக்கின்றன

சென்னை கோமளீஸ்வரன்பேட்டை
நாகப்பமுதலி வீதி 15-வது
வீட்டிலிருக்கும்,

பொ. குமரகுரு முதலியார்

அவர்களது

ஜெகத்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1908 அணா 2.

உ

கடவுள் துணை.

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டும்,

உடற்கூற்றுவண்ணமும்.

இவை

பொ. குமரகுரு முதலியார்,

அவர்களது

ஜெகத்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

சுத்தப் பதிப்பு] [விலை அணா

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டிணத்துப்பிள்ளையாருடைய
சரித்திரச்சுருக்கம்.

சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டணத்தில் குபேரன் திருவெண்காடரென்னும் பட்டணத்துப் பிள்ளையாக அவதரித்துச் சீமானாயிருந்தனர். பின்பு இவர் விவாகமுடித்தும் புத்திரனில்லாமல்வருந்துகை யில், பரமசிவன் ஒருகுழந்தைவடிவமாகத் திருவிடை மருதூர் உத்தியானவனத்தில் வில்வமரத்தடியின்அரு கிலிருந்தனர் இதைக்கண்டு மிகுதியும் வறியராயிரு ந்த சிவசருமரும், அவர் மனைவியாரும் குழந்தையை யெடுத்துவந்து புத்திரனில்லாத பட்டணத்துப் பிள் ளைக்குக்கொடுத்து நிரம்பப் பொன்பெற்றுச் சென்ற னர். குழந்தையாகிய பரமசிவன் மருதப்பிரான் என் னும் பெயர்தரிக்கப்பெற்று வளர்ந்து பதினாறுவயதா கையால் பிதாவில்லாத சமயத்தில் தாயாரிடம் வந்து "காதற்றவூசியும் வாராது கடைவழிக்கே" என்னும் வாக்கியமெழுதிய ஒரு நறுக்கையும், ஒருகாதற்றவூசி யும் ஒரு பெட்டியில்வைத்து தாளிட்டு, அதை அந்த அம்மனிடங்கொடுத்து இதை என் பிதா வந்தவுடன் கொடுக்கக்கடவீர் என்று சொல்லி மறைந்து போயி னர். அந்த அம்மனும் பிதாவாகிய பட்டணத்துப் பிள்ளை வந்தவுடன்கொடுக்க, அவர் அப்பெட்டியைத் திறந்து காதற்றவூசியையும் நறுக்கையும் கண்டு ஞானோதயமாகி இதுவரையிலுந் தமக்குத்திருமகனாக விருந்தவர் பரமசிவனென்றுணர்ந்து தமது செல்வப்

பொருளைப் பலருக்குஞ்சூறையிடும்படி தமது தலைமைக் காரியக்காரராகிய சேந்தனருக்குக் கட்டளை யிட்டுத் துறவுபூண்டு, அவ்வூரிற் பிச்சை யெடுத்துண்டு வந்தனர். இதைக்கண்டு அவர் சுற்றத்தார் வருந்துகையில் அவரது தமக்கையர் இவர் இறந்தாலும் நல்லதென வெறுத்து விஷங்கலந்த ஓட்டப்பம் ஒன்று சுட்டுத் தரவே அப்போது பட்டணத்தார் "தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று சொல்லி அவ்வப்பத்தைக் கொடுத்தவர்வீட்டிற் சொருகி அப் பட்டண முழுமையும் உயிர்க விறவாமல் எரித்துப், பின்பு தமது தாயார் இறந்தமையால் அந்த அம்மையைச் சுடுகாட்டில் தமது ஞானக்கினியால் சிலபாடல்களைப் பாடித் தகித்துத், திருவிடைமருதூரிற் சென்று அப் பால் திருவாரூரடைந்து அங்கு இறந்தவனைப் பிழைப் பித்துக், கொங்குநாட்டின் சிவஸ்தலங்களைத் தரிசித் துக் கொண்டு, துளுவநாடுவந்து பத்திரகிரி மகாராசனுக்கு ஞானோபதேசஞ் செய்து, திருவெண்காட்டுக்குச் சென்று அங்குத் தமது தலைமைக் காரியராகிய சேந்தனரைச் சிறையினின்று மீட்டுச் சிதம்பரம், திருக்காஞ்சி, திருக்காளத்தி முதலிய ஸ்தலங்களிற் சென்று சிவபிரானைப் பாடிப் பணிந்து திருவொற்றியூர் வந்து சிவலிங்கமாக உருமாறினர்.

, சென்னையைச் சார்ந்த திருவொற்றியூர்க் கடற்கரையோரம் இப்போழுது அவ்விடத்தில் அவர்பேரால் ஓர் ஆலயஞ் சமைக்கப்பட்டிருக்கின்றது.

சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பட்டினத்துப்பிள்ளையார்

திருப்பாடற்றிரட்டு

முதலாவது
கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின மனனே நின்மின்மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்கு மிறந்தனபிறக்கும்
தோன்றினமறையு மறைத்தனதோன்றும்
பெருத்தனசிறுக்குஞ் சிறுத்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனைபிறந்தனை பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைக்கொன்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன
ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை

ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினையிதனுள்
பீளையுநீரும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீருந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருவழி
சலமுஞ்சீயுஞ் சரியுமொருவழி
உள்ளூறத்தொடங்கி வெளிப்படநாறும்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலவற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலாக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

இரண்டாவது
கோயிற்றிருவகவல்

காதளவோடிய கலகப்பாதக்
கண்ணியர்மருங்கிற் புண்ணுடனுடுங்
காதலுங்கருத்துமல் லாநின்னிருதாட்

பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன்பாங்கிருந்
தங்கோடிங்கோ டலமருங்கள்வர்
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சீறூர்
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றம்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றற்றுண்டம் பேய்ச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோக்கிட மோடுமரக்கலம்
மாயாவிகார மரணப்பஞ்சரம்
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் கானப்பட்டம்
விதிவழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப்பாணன் தைக்குஞ்சட்டை
ஈமக்கனலி லிடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருமி
பவக்கொழுந்தேறுங் கவைக்கொழுக்கொம்பு
மணமாய்நடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்கிடக்கும் பிண்டப்பிணமே
ஊரிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிர்குவித்த பூளைகாலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிருமேகத் துருவினருநிழல்
நீரிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்காட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமயவல்லி வாழியென்றேத்த

ஆனந்தத்தாண்டவங்காட்டி
ஆண்டுகொண்டருள்கைநின் னருளிலுக்கழகே.

மூன்றாவது
கோயிற்றிருவகவல்.

பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய சிவனேயடைக்கலம்
அடங்கலுமடக்கிடுங் கடுங்கொலைக்காலனைக்
காலெடுத்தடக்கிய கடவுணின்னடைக்கலம்
உலகடங்கலும்படைந் துடையவன்றலைபறித்
திடக்கையிலடக்கிய விறைவநின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் செல்வநின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியனின்னடைக்கலம்
மனவழியலைத்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழுக்குறுமனனும்
ஆணவமலத்துதித் தளைந்திலுளைந்திடு
நினைவைப்புழுவென நெளித்திடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்
தவறுமழுக்காறு மிவறுபொச்சாப்பும்
கவடும்பொய்யுஞ் சுவடும்பெருஞ்சினம்
இகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பணிப்பும்
மூக்குணமடமையு மைம்பொறிமுயக்கமும்
இடும்பையும்பிணியு மிடுக்கியவாக்கையை
உயிரெனுங்குருகுவிட் டோடுங்குரம்பையை
எலும்பொடுநரம்புகொண் டிடையிற்பிணித்துக்
கொழுந்தசைமேய்ந்து பொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையை
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச்சோற்றுத் துன்பக்குழியை
கோபிபடைக்கலம்பல கிடைக்குங்கூட்டைச்
சபிப்புறுவினைப்பல சரக்குக்குப்பையைக்

கோட்சரக்கொழுகும் பீறற்கோணியைக்
கோபத்தீமூட்டுங் கொல்லன்றுருத்தியை
ஐம்புலப்பறவை யடையுஞ்பஞ்சரத்தைப்
புலராக்கவலை விளைமரப்பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரத்தைக்
காசிற்பணத்திற சுழலுங்காற்றாடியை
மக்கள்வினையின் மயக்குந்திகிரியைக்
கடுவெளியுருட்டிய சகடக்காலைப்
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குக்
காமக்கனலிற் காற்றெடுத்தலைப்பக்
கெடுவழிக்கரைசேர் நெடுமரக்கலத்தை
இருவினைவிலங்கொடு மியங்குபுற்கலனை
நடுவன்வந்தழைத்திட நடுங்கிடும்பாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
னடிமலர்க்கமலத்துக் கபயநின்னடைக்கலம்
வெளியிடயுருமிகு யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடைவெள்விடைக் கடவுணின்னடைக்கலம்
இமையாநாட்டித் திறையேயடைக்கலம்
அடியார்க்கெளியா யடைக்கலமடைக்கலம்
மறையவர்தில்லை மன்றுணின்றாடிச்
கருணைபொண்டலைசெறி கடலேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்
பாசிழைக்கொடியோடு பரிந்தருள்புரியும்
எம்பெருமானின் னிணையடிக்கபயம்
அம்பலத்தரசே யடைக்கலமுனக்கே.

நான்காவது

கச்சித்திருவகவல்.

திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியு மானுடத்துதித்து
மலைமகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்

மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமாக்க டெளிவுறக்கேண்மின்
முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்கால்
துள்ளும்வராலெனச் சொல்லித்துதிக்கும்
தசையுமெலும்புந் தக்கபுன்குரம்பை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெடுமுடரூங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமிஞ்சலமும் வழும்புத்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிலைத்துமுன்னெழுந்து
இரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
உகிராற்கிர வுளர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்
கூலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டமும்பிசையவு முதவிதங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினிய கமுகெனப்பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவவியவாயைத்
துப்புமுருக்கின் தூய்மலரென்னும்
அன்னமுங்கறியு மசைவிட்டிறக்கும்
முன்னிபல்லை மூத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூறியமூக்கைக்குமிழெனக்கூறியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியும்

கையுமெண்ணையுங் கலவாதொழியில்
வெய்யவதரும் பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நக்கிச்செல்லு நரகவாயில்
தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடவழி தொலைபெறுவாயில்
எண்சாணுடம்பு மிழியும்பெருவழி
மண்பாற்காமங் கழிக்குமறைவிடம்
நச்சிக்காமுக னாய்நாயென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோகைச்செழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்க்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாயிற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாழியில்
இத்தைநீங்க ளினிதெனவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமு
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமாலை.

கட்டளைக்கலித்துறை.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்,
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்,
மறந்தானறக்கற் றறிவோடிருந் திருவாதனையற், றிற
ந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சியே
கம்பனே. (1)

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்காலத்தச்சன்,
வெட்டிமுறிக்குமரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டா
கொட்டிமுழக்கியழுவார்மயானங்குறுகியப்பா, [ற்,
லெட்டியடிவைப்பரோவிறைவாகச்சியேகம்பனே. (2)

கைப்பிடிநாயகன்றூங்கையிலேயவன்கையையெடுத்,
தப்புறந்தன்னிலசையாமல்முன்வைத்தயல்வளவி,
லொப்புடன்சென்றுதுயினீத்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவேனிறைவாகச்சியேகம்பனே. (3)

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன்னார்தப்பினா
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ,
லுன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தா,
லென்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே

நல்லாரிணக்கமும்நின்பூசைநேசமும்ஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வுமெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. ()

பொல்லாதவனெறிநில்லாதவனைம்புலன்கடமை,
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பாற்,
சொல்லாதவனுண்மைசொல்லாதவனின்றிருவடிக்கண்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப்பிறந்துமண்ண

மே, இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடு விற், குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக் கறியா, திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன்கச்சி யேகம்பனே. (7)

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரவைத்தாயிறைவாகச்சியேகம்பனே. (8)

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி, நில்லாப்பிழையு நினையாப்பிழையுநின் னஞ்செழுத் தைச், சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப் பிழையும், எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. (9)

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்,
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்[க்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின்றாயைமற
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே.
வரிக்கோலவேல்விழியாரநுராகமயக்கிற்சென்று, [ல்,
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்நமியேனுட
னரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனக்கோ,
வெரிக்கோவிரையெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே.

காதென்றுமூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே, மாதென்றுசொல்லி வருமாயைதன்னை மறவிவிட்ட, தாதென்றெண்ணுமற் சுகமென்றுநாடி மித்துர்ப்புத்தியை, யேதென்றெடுத் துரைப்பேனிறை வாகச்சியேகம்பனே. (12)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்

சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே. (14)

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே.

பொருளுடையோரைச் செயலினும் வீரரைப்போர்க்களத்துந், தெருளுடையோரை முகத்திலுந்தேர்ந்து தெளிவதுபோ, லருளுடையோரைத் தவத்திற்குணத்திலருளிலன்பி, லிருளாறுசொல்லினுங் காணத்தகுங் கச்சியேகம்பனே. (15)

பருத்திப் பொதியினைப் போலேவயிறு பருக்கத்தங்க, டுருத்திக் கறுசுவை போடுகின்றார் துறந்தோர் தமக்கு, வருத்தி யமுதிட மாட்டாதவரை யிம்மானிலத்தி, லிருத்திக்கொண் டேனிருந்தா யிறைவா கச்சி கேம்பனே. (16)

பொல்லாவிருளகற் றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக், கல்லாயிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில், வல்லாரறிவா ரறியார்தமக்கு மயக்கங்கண்டா யெல்லாம்விழிமயக் கேயிறைவாகச்சி யேகம்பனே.

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார், தீதுக்குதவியுஞ் செய்திடுவார்தினந்தேடியொன்று, மாதுக்களித்து மயங்கிடுவார்விதி மாளுமட்டு, மேதுக்கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே. ()

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பருற்றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க, ளாயார் பிறர்க்குப காரஞ்செய்யார் தமையண்டினர்க்கொன், றீயாரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே. (19)

அப்பென்றும்வெண்மைய தாயினுமாங்கந் நிலத்தி
யல்லால், தப்பின்றியேகுண வேற்றுமைதான்பலசார்
தலினற், செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ளசீவனுனு,
மிப்படியேநிற்ப னெந்தைபிரான்கச்சி யேகம்பனே.()

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்,
தாயார்வயிற்றி னராய்ப்பிறந்துபின் சம்பன்னராய்க்,
காயாமரமும்வறளாக்குளமுங்கல்லாவுமென்ன, வீயா
மனிதரையேன்படைத்தாய்கச்சி யேகம்மனே. (21)

ஆற்றிற்கரைத்த புளியாக்கிடாமலென் னன்பையெ
ல்லாம், போற்றித்திருவுளம் பற்றுமையாபுர மூன்றெ
ரித்துக், கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய் குன்ற
வில்லுடையா, யேற்றுக்கொடியுடையாயிறைவாகச்சி
யேகம்பனே. (22)

பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்
டென்னைக், கண்ணால்வெருட்டிமுலையால்மயக்கிக்கடி
தடத்துப், புண்ணாங்குழியிடைத் தள்ளியென்போதப்
பொருள்பறிக்க, வெண்ணா துனைமறந்தே னிறைவா
கச்சியேகம்பனே. (23)

நாவாரவேண்டு மிதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்
தாற், சாவேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள்கை
தான்வரண்டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கேகு
ட்டும் பூவையருக், கேவார்தலைவிதியோ விறைவாகச்சி
யேகம்பனே. (24)

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்
னபடி, நில்லாரறத்தை நினையார்நின்னாம நினைவிற்சற்
றும், இல்லாரிருந்தென் னிறந்தென்ன காண்கச்சியே
கம்பனே. (25)

வானமுதத்தின் சுவையறியாதவர் வன்கனியின்,
தேனமுதத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனி

யே தேனமுதத்தின் றெளிவாயஞானஞ் சிறிதுமில்லார்க், கூனமுதச்சுவை நன்றல்லவோகச்சி யேகம்பனே. (26)

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்த, பீற்றத்துருத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய, காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே, யேற்றுத் திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே. (27)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால்வருந் தோடஞ்செய்த, பொல்லாத தீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநூ, லல்லாதகேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளாயவுமற், றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே. (23)

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி, மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப், பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே, லிட்டத்தை நீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே. (29)

பிறந்துமண்மீதிற் பிணியேகுடிகொண்டு பேரின்பத்தை, மறந்துசிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட், பறந்துழன்றேதடு மாறிப்பொன் றேடியப்பாவையர்க்கீந், திறந்திடவோ பணித்தாயிறைவாகச்சியேகம்பனே. (30)

பூதங்களற்றுப் பொறியற்றுச் சாரம் புலன்களற்றுப், பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்றுக், காதங்கரணங் கருமற்றவானந்தக் காட்சியிலே, யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே. (31)

நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருண் ஞானமிலாப், பொல்லா வினைக்கொன்று போடும்பொழுதில் பூசைசெயஞ், சொல்லார்நற்கோயி லியமம்பல

வகைத் தோத்திரமு, மெல்லாமுடித்தபின் கொல்லு
கண்டாய் கச்சியேகம்பனே. (32)

சடக்கடத்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்
கொன்று, விடக்கடித்துக்கொண் டிறுமாந்திருந்து
மிகமெலிந்து, படக்கடித்தின்றுழல் வார்கடமைக்கரம்
பற்றிமே, னிடக்கடிக்கும் பொழுதேது செய்வார்கச்சி
யேகம்பனே. (83)

நாறுமுடலை நரிப்பொதிசோற்றினை நான்றினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ்சேருங் குழியில்விழா, தேறும்
படியருள் வாயிறைவா கச்சி யேகம்பனே. (24

சொக்கிட்டரமனைப் புக்குட்டிருடிய துட்டர்வந்து,
திக்குற்றமன்னரைக் கேட்பதுபோற்சிவ நிந்தை
செய்து, மிக்குக்குருலிங்க சங்கம்நிந்தித்து வீடிச்
சிக்கு, மெக்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன்
கச்சியேகம்பனே. (35)

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்,
பொருந்தார்வளம்பெற வாழ்வார்நின்றையத்தைப் போ
ற்றித்த, மருந்தார்முலைபங்க னென்றதபாதக ரம்பு
வியி, லிருந்தாவதேதுகண்டா யிறைவாகச்சி யேகம்
பனே. (36)

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி,
வல்லான்றிந்துள னென்றுணராது மதிமயங்கிச், சொ
ல்லான்மலைந்து று சூழ்விதியின்படி துக்கித்துப்பி, னெ
ல்லாஞ்சிவன்செயலே யென்பர்காண்கச்சியேகம்பனே.

பொன்னைநினைத்து வெகுவாகத்தேடுவர், பூவையன்
ளை, டன்னைநினைந்து வெகுவாயுருகுவர் தாரணியி,
லுன்னைநினைந்திடுங் குணைப்பூசியாத வுலுத்தரெல்ல
மென்னையிருந்துகண்டா யிறைவாகச்சியேகம்பனே.

கடுஞ்சொல்லின்வம்பரை யீனரைக் குண்டரைக்கா முகரைக், கொடும்பவமேசெயு நிர்மூடர்தம்மைக்குவலயத்து, நெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா, விடும்பரை யேன்வகுத்தா யிறைவாகச்சியேகம்பனே. (39)

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்புகொன்று கொன்று, தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனது தீர்கவென்றே, நின்றேனின்சந்நிதிக் கேயதனாற்குற்ற நீபொறுப்பா, யென்றேயுனை நம்பினேனிறைவாகச்சியேகம்பனே. (40)

திருவேகம்ப விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனையன்னையோ
வப்பனெத்தனை யெத்தனையப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனைபிள்ளையோ
முன்னையெத்தனை யெத்தனைஜென்மமோ
மூடனாயடி யேனுமறிந்திலே
னின்னமெத்தனை யெத்தனைஜென்மமோ
யென்செய்வேன் கச்சி யேகம்பநாதனே. (1)

திருத்தில்லை.

கட்டளைக்கலித்துறை.

காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினுக்குந், தாம்பிணங்கும்பல வாசையும்விட்டுத் தனித்துச்செத்துப் போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற், சாம்பிணங் கத்துதையோ வென்செய்வேன்றில்லைச் சங்கரனே. (1)

சோறிடுகாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக் கண், டேறிடுங்கைக ளிரங்கிடுதீவினை யெப்பொழுதும், நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா, லூறிடுங்கண்க ளுருகிடுநெஞ்சமென் னுள்ளமே. (2)

அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப்பொன் னம்பலத்தார், நிழலுக்குணின்று தவமுஞற்றா

கிட்டேயின்றார், குழலுக்கிசைந்த வளைமாலைகொண்டுகுற் றேவல்செய்து, விழலுக்குமுத்துலை யிட்டிறைத்தேனென் விதிவசமே. (3)

ஓடாமற்பாழுக்குழையாமலோர முறைப்பவர்பாற், கூடாமனல்லவர் கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி னாடாமனன்மை வழுவாமலின்றைக்குநாளைக்கென்று தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. (4)

பாராமலேற்பவர்க்கில்லையென்னுமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமல்மனமயர்ந்து
பேராமற்சேவைபிரியாமலன்புபெருதவரைச்
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (5)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு, கல்லாமற்கைதவ ரோடிணங்காமற் கனவினும்பொய், சொல்லாமற் சொன்னதைக் கேளாமற் றெரிவையர் மாயையிலே, சொல்லாமற்செல்வந் தருவாய் சிதம்பரதேசிகனே. (6)

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு, பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப், படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாமற் பொன்னினம்பலவ, ரடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையே. (7)

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதிதுயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (8)

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென்றாற், பாயுமிடபங் கடிக்குமரவம்பின் பற்றிச்சென்றாற் பேயுங்கணமுமே பெருந்தலைப்பூதமும்பின்றொடரும், போயென்செய்வாய்மனமே பிணக்காடவர்போமிடமே.

ஓடுமெடுத்த ளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள, வீடுகடோறும் பலிவாங்கியேவிதி யற்றவர்போ, லாடுமருட்கொண்டிங் கம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத், தேடுங்கணக்கென்ன காண்சிவகாம சவுந்தரியே. (10)

ஊட்டுவிப்பானு முறக்குவிப்பானுமிங் கொன்றோ டொன்றை, மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை, காட்டுவிப்பானு மிருவினைப்பாசக் கயிற்றின்வழி, யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லை யம்பலத்தே. (11)

அடியார்க்கெளியவரம்பலவாணரடி பணிந்தால்
மடியாமற்செல்வரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே.

தெய்வச்சிதம்பர தேவாவுன்சித்தந் திரும்பிவிட்டாற். பொய்வைத்த சொப்பன மாமன்னர்வாழ்வும்பு வியுமெங்கே, மெய்வைத்த செல்வமெங்கேமண்டலீக ர்தம் மேடையெங்கே, கைவைத்தநாடக சாலையெங் கேயிது கண்மயக்கே. (12)

உடுப்பானும்பாலன முண்பானுமுப்பித் தொருவர் தம்மைக், கெடுப்பானுமே தென்றுகேள்விசெய்வானு ந்திகழியடங்கக், கொடுப்பானுந்தேகியென்றேற்பானு மேற்கக் கொடாமனின்று, தடுப்பானுநீயல்லையோ தில் லையானந்தத்தாண்டவனே. (14)

வித்தாரம்பேசினுஞ் சோங்கேறினுங்கம்ப மீதிருந்து, தத்தாவென்றோதிப் பவுரிகொண்டாடினுந்தம் முன்றம்பி, யொத்தாசைபேசினு மாவதுண்டோ தில் லையுண்ணிறைந்த, கத்தாவின்சொற்படி யல்லாதுவே றில்லை கன்மங்களே. (15)

பிறவாதிருக்கவரந்தரல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ

வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. (16)

தவியாதிரு நெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்,
புவியார்ந்திருக்கின்ற ஞானாகரனைப் புராந்தகனை,யவி
யாவிளக்கையென் னம்பலத்தாடியை யைந்தெழுத்
தாற், செவியாமனிசெவித் தாற்பிறவா முத்திசித்திக்
குமே. (17)

நாவின்மறைபொரு ளம்பல்வாணரை நம்பியவர்,
பாவிலொருதரஞ் சேவிக்கொணாதிருப்பார்க்கருங்கல்,
மேவிலெடுத்தவர் கைவிலங்கத்தைப்பார்மீண்டுமொரு,
காவினிறுத்துவர் கிட்டியுந்தாம்வந்துகட்டுவரே.(18)

ஆற்றோடுதும்பை யணிந்தாடுமம்பலவாணர்தமைப்,
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்,
சோற்றாவியற்றுச் சுகமற்றுச் சுற்றத்துணியுமற்று,
யேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பார்களே.

அத்தனைமுப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை,
நித்தனையம்மைசிவகாமசுந்தரி நேசனையெங்,கத்தனைப்
பொன்னம் பலத்தாடுமையனைக் காணக்கண்க, ளெத்
தனைகோடியுகமோதவஞ்செய் திருக்கின்றதே. (20)

திருச்செங்கோடு.

நெருப்பான மேனியர் செங்காட்டிலாத்தி நிழலரு
கே, யிருப்பார்திருவுள மெப்படியோவின்னமென்னை
யன்னை, கருப்பாசயக்குழிக்கே தள்ளுமோ கண்ணன்
காணரிய, திருப்பாதமேதருமோ தெரியாது சிவன்
செயலே. (21)

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்றுவேண்டு

வன்யான், செய்யுந்திருவொற்றி யூருடையீர்திருநீறு, யிட்டுக், கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோ தவுங் கற்பியுமே. (1)

சுடப்படுவா ரறியார்புர மூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பதந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக்கிழிப்பதுவே.

திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தை சுற்றி, யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்குவிண்ணோர், நாடேயிடைமரு தீசர்க்கு நல்லன்பர் நாரியர்பால், வீடேயிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்பமேவுவரே. (1)

தாயும்பகைகொண்ட பெண்டீர்பெரும்பகை தன் னுடைய, சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும் பகை, யாயும்பொழுதி லருஞ்செல்வநீங்கிலிங் காதலி னாற், றேயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சுதந்திரமே

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேசெறிந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன் றிலீசாவுயிர்த்துணைநின்பதமே.

திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி, முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு, செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங் கள், கத்துங்கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தி யே. (1)

பொன்னாற் ப்ரயோசனம் பொன்படைத்தார்க்குண்டப் பொன்படைத்தோன், றன்னாற்ப்ரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்போ, லுன்னாற்ப்ரயோசனம் வேணதெல்லாமுண் டுனைப்பணியு, மென்னாற்ப்ரயோசன மேதுண்டுகாளத்தியீச்சுரனே.(2)

வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லேன் மாது சொன்ன, சூளாலிளமை துறக்கவல்லே னல்லன் றொண்டுசெய்து, நாளாறிற்கண்ணிடந் தப்பவல்லே னல்லனானிச்சென் றுளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருகே. (3)

முப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவு மோகத்தினாற், செப்போதிளமுலை யாருடன்சேரவுஞ் சீவன்விடு மப்போது கண்கலக்கப்படவு மமைத்தாயையனே யெப்போதுகாணவல் லேன்றிருக்காளத்தியீச்சுரனே.

இரைக்கேயிரவும்பகலுந்திரிந்திங்கிளைத்துமின்னா, ரரைக்கேயவலக் குழியருகே யசும்பார்ந் தொழுகும், புரைக்கேயுழலுந்தமியேனை யாண்டருள்பொன்முகலிக், கரைக்கேகல்லாலநிழற்கீழமர்ந்தருள் , காளத்தியே. (5)

நாறுங்குருதிச் சலதாரை தோற்புரைநாடோறுஞ் சீ, யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண், டேறுந்தசைப்பிளப் பந்தரங்கத்துள சிற்றின்பம்விட், டேறும்பதந்தரு வாய்திருக்காளந்தி யீச்சுரனே. (6)

கயிலாயம்.

கான்சாயும்வெள்ளி மலைக்கரசேசின் கழனம்பினே, னூன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கடவூரனுக்கா மான்சாயச்செங்கை மழுவலஞ்சாய் வளைந்தகொன்

ணைத், தேன்சாயகல்ல திருமேனிசாய்த்த சிவக்கொ ழுந்தே. (1)

இல்லந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று, பல்லுங்கரையற்று வெளவாயுமாயொன்றிற் பற்று மின்றிச், சொல்லும் பொருளுமிழந்து சுகானந்தத் தூக்கத்திலே, யல்லும்பகலு மிருப்பதென்றோ கயி லாயத்தனே. (2)

சினந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கை யற்று, நினைந்துமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந் தனாய்த், தனிந்தனியே யிருந்தானந்தநித்திரை தங் குகின்ற, வனந்தலிலென்றிருப்பே னத்தனே கயிலா யத்தனே. (3)

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று கரித்துணி யைத், தையாதுடுத்துநின் சந்நிதிக்கேவந்து சந்த தமு, மெய்யாரநிற் பணிந்துள்ளேயுரோமம் விதிர் விதிர்ப்ப, வையாவென்றோல மிடுவதென்றோ கயிலா யத்தனே. (4)

நீரூர்த்தமேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக் குச், சேருப்கசிந்து கசிந்தேயுருகி நின்சீரடிக்கே, மாறாத்தியானமுற் றானந்தமேற்கொண்டு மார்பிற் கண்ணீ, ராறாய்ப்பெருகக்கிடப்பதென்றோ கயிலாயத் தனே. (5)

செல்வரைப் பின்சென்று சங்கடப்பேசித் தினந் தினமும், பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந் தத்தி, னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக்கா மிடத்தே, யல்லலற்றென்றிருப்பே னத்தனே கயிலா யத்தனே. (6)

மந்திக்குருநோயொத் தேனில்லைகாயேன் வழக்க நித்துஞ், சிந்திக்குஞ்சிந்தையை யாமென்செய்வே னெனைத் தீதகற்றிட், புந்திப்பரிவிற் குருஞானையே

க்தியபூசையைப்போ, லெக்தைக்குரியவன்கா ணக் தனே கயிலாயத்தனே. (7)

'வருந்தேன்பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழி போய்ப், பொருந்தேனரகிற் புகுகின்றிலேன் புகழ் வாரிடத்தி, லிருந்தேனினியவர் கூட்டம்விட்டேனிய லஞ்செழுத்தா, மருந்தேனருந்துவ னின்னருளாற் கயிலாயத்தனே. (8)

மதுரை.

விடப்படுமோவிப் பிரபஞ்ச வாழ்க்கையைவிட்டு மனந், திடப்படுமோ நின்னருளின்றியேதின மேய லையக், கட்டப்படுமோவற்பர் வாயிலிற்சென் றுகண் ணீர்ததும்பிப், படப்படுமோ சொக்கநாதா சவுந்தர பாண்டியனே. (1)

உடைகோவணமுன் டுறங்கப்புறந்திண்ணையுண் டுணவிங், கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கோ, விடையேறுமீசர் திருநாமமுண் டிந்த மேதினியில், வடகோடுயர்ந்தென்ன தென் கோடுசாய்ந்தென்ன வான்பிறைக்கே. (2)

வீடுநமக்குத்திருவேலக்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குஞ்செல்வ
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவோவொருவருமிங்கில்லையே. (3)

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றாயிலை நாதரடி தேடிக்கொண்டாடித் தெளிந்தாயிலைசெக மாயை வந்து, மூடிக்கொண்டோமென்றுங் காமாயுதங் கண்முனிந்தவென்றும், பீடிப்பையோ நெஞ்சமே யுனைப்போலிலைப் பித்தர்களே. (4)

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத் தொன்றெண்ணம், பொய்யொன்றுவஞ்சக நாவொ

ன்றுபேசப் புலால்கமழு, மெய்யொன்றுசாரச்செவி யொன்றுகேட்க விரும்புமியான், செய்கின்ற பூசை யெவ்வாறுகொள்வாய் வினைதீர்த்தவனே. (4)

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் களிக்கத் தருகிப், பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையா, லெண்ணுண்டுசாத்தவெதிர் நிற்கவீச னிருக்கையிலே, மண்ணுண்டுபோகுதையோ கெடு வீரிந்த மானுடமே. (5)

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதி யிலும், அல்லிலும்மாசற்ற வாகாயந்தன்னிலுமாழ்ந்து விட்டோ,ரில்லிலுமன்பரிடத்திலு மீசனிருக்குமிடங், கல்லிலுஞ்செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணு தலே. (6)

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய் வினைதா னொழிந்தாற், றினைப்போதளவுநில் லாதுகண்டாய் சிவன்பாதநினை, நினைப்போரைமேவு நினையாரை நீங்கிந்நெறியினின்றா, லுனைப்போலொருவருண்டோ மனமேயெனக்குற்றவரே. (7)

பட்டைகிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து, முட்டைச்சுருட்டிபெண் மொய்குழலாள் கையில்முன் கொடுத்துக், கட்டியிருந்தகளமாயக்காரிதன் காமமெல் லாம், விட்டுபிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்ட துவே. (8)

கோதுற்றகொங்கையு மானார்கல்வியுஞ் சூழ்பொரு ளும்,போதுற்றபூசலுக் கென்செயலாஞ்செய் தபுண்ணி யத்தாற், றீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவ தற்கோ, காதற்றவூசியைத் தந்துவிட்டானென்றன் கைதனிலே. (9)

வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப், போதுற்றெப்போதும் புகலுநெஞ்சேயிந்தப் பூதலத்

றிற, நீ துற்றசெல்வமென் றேடிப்புதைத்தது திரவிய மென், காதற்றஊசியும் வாராது காணுங்கடைவழிக்கே. (10)

வேதத்தினுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப், போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தா, லாதித்தன் சந்திரன்போலே வெளிச்சமதாம்பொழுது, காதற்றஊசியும் வாரர்து காணுங் கடைவழிக்கே. (11)

மனையாளுமக்களும்வாழ்வுந் தனமுந்தன் வாயின் மட்டே, யினமானசுற்ற மயானமட்டே வழிக்கேது துணை, தினையாமளவெள்ளளவாகிலு முன்புசெய்த தவந், தனையாளவென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. (12)

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு கைத்தலைமேல்வைத் தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே பற்றித்தொடரு மிருவினைப்புண்ணிய பாவமுமே.

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து பாயும்புடவையொன் றில்லாதபோது பகலிரவா யீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவு (கல் மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்திலலையே.

சீதப்பனிக்குண்டு சிக்கெனக்கந்தை தினம்பசித்தா லீதுய்க்கச்சோறு மனைதோறுமுண்டுவினை யொழுங் தால், வீதிக்குணல்ல விலைமாதருண்டிந்த மேதினியி லேதுக்குநீசலித்தாய் மனமேயென்றும் புண்படவே.

ஆறுண்டுதோப்புண் டணிவீதியம்பலந் தானு முண்டு, நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டுநித்த நித்த, மாறுண்டுலாவிமயங்குநெஞ்சே மனைதோறுஞ் சென்று, சோறுண்டு தூங்கிப்பின் சும்மாவிருக்கச் சுகமுமுண்டே. (16)

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்றுவெய்யி லொடுங்கி வந்தாற், நடுக்கப்பழைய வொருவேட்டியுண்டுசக முழுதும், படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தாற், கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சே நமக் குக் குறைவில்லையே. (17)

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வ தெல்லாங், கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேண்மனமே,யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத் தைந்து மோதவுண்டு, தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமுண்டே. (18)

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு நீத்தார்தமக்கொரு நிஷ்டையுண்டோ நித்தனன்பு கொண்டு, வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழித்துயின்று, பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர் பற்றற்றவரே. (19)

ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிரு வுயர்செல்வ மெல்லா, மன்றென்றிரு பசித்தோர்முகம் பார்நல் லறமுநட்பு, நன்றென்றிருநடு நீங்காமலே நமக்கிட்ட படி, யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே.

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தைநம்புபொம்ம, லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்த சந் தைக், கூட்டமென்றே யிருசுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ, ரோட்டமென்றே யிருநெஞ்சே யுனக் குபதேசமிதே. (21)

என்செயலாவதி யாதொன்றுமில்லை யினித்தெய்வ மே, யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்தவூனெ டுத்த, பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப் பதற்கு, முன்செய்ததீவினையோ விங்ஙனவந்து மூண் டதுவே. (22)

திருவேடமாகித் தெருவிற்பயின்றென்னைத் தேடி
வந்து, பரிவாகிப்பிச்சை பகருமென்றுனைப் பதம்பணி
ந்தேன், கருவாகுமேதக் கடற்கறைமேதக் கருது
மென்னை, யுருவாக்கிக் கொள்ளவல்லோ விங்ஙனே
சிவனுற்றதுவே. (23)

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீணருடன்
கிட்டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலே,
தொட்டேன்சுகதுக்க மற்றுவிட்டேன்றுன்லே நான்
மறைக்கு, மெட்டேனெனும்பர மென்னிடத்தே வந்
திங் கெய்தியதே. (24)

அஷ்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைந்
தும், விட்டேறிப்போன வெளிதனிலே வியப்பொன்
று கண்டேன், வட்டாகிச்செம்மதிப் பாலூறலுண்டு
மகிழ்ந்திருக்க, வெட்டாதபேரின்பமென்னை விழுங்கி
யிருக்கின்றதே. (25)

எரியெனக்கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்த
மண்ணுஞ், சரியெனக்கெனும் பருந்தோவெனக்கெ
னுந் தான்புசிக்க, நரியெனக்கெனும் புன்னாயெனக்
கெனுமிந்நாறுடலைப், பிரியமுடன் வளர்த்தேனிதனா
லென்ன பேறெனக்கே. (26)

அண்ணறன்வீதி யரசிருப்பாரு மணிபடையோர்,
நண்ணொருநாளொன்ப தாமவரேவலு நண்ணுமில்
ஆர், துண்ணென் பசிக்கு மடைப்பள்ளியான [illegible]கமு
மெல்லா, மெண்ணிலிகால மவமேவிடுத்தன மென்
னரிதே. (27)

என்பெற்றதாயாரு மென்னைப்பிணமென்றிகழ்ந்து
விட்டார், பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப்புலம்பிவிட்டார், கொன்பெற்ற மைந்தரும்
பின்வலம் வந்துகுடமுடைத்தா, ருன்பற்றொழிய
வொருபற்றுமில்லை யுடையவனே. (28)

கறையற்றபல்லுங் கரித்துணியாடையுங்கள்ளமின்றிப், பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாதவூணும் புறந்திண்ணையுந், தறையிற்கிடப்பு மிரந்துண்ணு மோடுஞ் சுகமறியக், குறைவற்ற செல்வமென்றே கோலமாமறை கூப்பிடுமே. (29)

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய், முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங், கட்டிச்சுருட்டித் தங்கக்கத்தில்வைப்பர் கருத்தில்வையார், பட்டப்பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. (30)

வாய்நாறுமூழன் மயிர்ச்சிக்குநாறிடுமையிடுங்கண், பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்ச், சீநாறும்யோனி யழுநாறுமிந்தியச் சேறுசிந்திப் பாய்நாறு மங்கையர்கோ விங்ஙனேமனம் பற்றியதே. (31)

உரைக்கைக்குநல்லதிருவெழுத்தைந் துண்டுரைப்படியே, செருக்கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையிற், றரிக்கக்கரித்துணியாடையு முண்டெந்தச்சாதியிலு, மிரக்கத் துணிந்துகொண்டேன் குறையேது மெனக்கில்லையே. (32)

ஏதப்பட்டாயினி மேற்படும் பாட்டை யினிதென்றறிந்து, போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று நல்லறிவால், வாதைப்பட்டாய்மட மாதர்களாவி மயக்கத்திலே, பேதைப்பட்டாய் நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தர்களே. (33)

சுரப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக், கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்றுக் கவலையற்று, வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்திமனமடங்கப், பரப்பற்றிருப்பதன்றோ பரமாபரமானந்தமே.

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம், நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத், தாய்போற்கருதித் தமர்போலனை

வர்க்குந்தாழ்மை சொல்லிச், சேய்போலிருப்பர்
கண்டீர்வுண்மை ஞானந்தெளிந்தவரே. (35)

விடக்கேபெருந்தின் விருந்தேகமண்டலவீணனிட்ட
முடக்கேபுழுவந் துறையிடமேநல முற்றுமிலாச்,
சடக்கேகருவி தளர்ந்துவிட்டாற் பெற்றதாயுந்தொ
டாத், தொடக்கே யுனைச்சுமந்தே ளின்னினேதுசுக
மெனக்கே. (36)

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன வாவ
தில்லை, தொழுதாற்பயனென்ன நின்னையொருவர் சுட
வுரைத்த, பழுதாற்பயனென்ன நன்மையுந்தீமையும்
பங்கயத்தோன், னெழுதாப்படிவருமோ சலியாதிரென்
னேழைநெஞ்சே. (37)

செல்வரைப்பின்சென் றுபசாரம்பேசித் தினந்
தினமும், பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்
தத்தி, னெல்லையிற்புக்கு நல்லேகாந்தமாயெனக் கா
மிடத்தே, யல்லலற்றென் றிருப்பேனல நீழலரும்பொ
ருளே. (38)

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப் [ற்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணையி
சாரீணைந்தலை சுற்றத்தைநீங்கிச் சகநகைக்க
ஏரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே. (39)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லைமாமறையா
லேற்றிக்கிடக்குமெழுகோணமந்திரமென்னகண்டா
யாற்றிற்கிடந்துந் துறையறியாமலலைகின்றையே. (40)

ஓங்காரமாய் நின்றவத்துவிலே யொருவித்துவந்து
பாங்காய் முளைத்தபயனறிந்தாற் பதிற்றுலகு
நீங்காமனீங்கி நிறையா நிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாக்கனி வந்தமர்ந்திடுமே.

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார்துடைப்பு நல்பாலனுகாதுபரானந்தமே :

கதியாக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவென
மதியாதிருமனமே யிதுகாணன் மருந்துனக்கே. (42)

நாய்க்குண்டுதொண்டு நமக்குண்டுபிச்சை, நமனை வெல்ல, வாய்க்குண்டுமந்திரம் பஞ்சாட்சரமதியாமல் வரும். பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்றபிறவிப் பிணி, நோய்க்குண்டுதேசிகன் றன்னருணோக்கங்க ணோக்குதற்கே. (43)

நேமங்கணிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
யோமங்கடர்ப் பணஞ்சந்தி செபமந்த்ரயோகநிலை
நாமங்கள் சந்தனம்வெண்ணீறு பூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர் செய்யும்பூசைகள் சர்ப்பனையே.

நாமெத்தனைபுத்தி சொன்னாலுங்கேட்டிலை நன் னெஞ்சமே, ஏனிப்படிக்கெட் டுழலுகின்றாய்? யினி யேதுமிலா, வானத்தின்மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையதுபோற், போனத்தைமீள நினைக்கின்றனை யென்ன புத்தியிதே. (45)

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம் புலனும், வஞ்சப்புலக்கட்டை வேறரவெட்டி வளங் கள்செய்து, விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப், புஞ்சக்களைபறித் தேன்வளர்த்தேன் சிவ போகத்தையே. (46)

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத்தாழ்ந் திடுநாணீயாருநானாரெனப்பகர்வாரந்த நேரத்திலே, நோயாரும்வந்து குடிகொள்வரேற் கொண்டநோயு மொரு பாயாருமில்லாய் பின்னையேது நட்பா முடலே. (47)

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி
தோயுமலக்குட்டையாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங்கடமாமென்றுபேசுவதை
நீயுமறிந்திலையோ பொருடேட நினைந்தனையே. (48)

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குந்தானல்ல பூமிதனைக், காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்லநற் காட்சிக்கல்ல சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென்சிந்தை கெட்டுச், சாணும்வளர்க்க வடியேன் படுந்துபர் சற்றல்லவே. (49)

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவர்க்
கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருத்தாதநெஞ்சங்கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றேகுருநாதன்மொழிந்ததுவே.

எருமுட்டைபுட்கி லுதிர்ந்திடுஞ் செல்லுக்கெவாறு வார், கருமுட்டைப்பக்குக் கழலகன்றாய் கனதுக்கமதாய்ப், பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதையிற் பேத்துகிறீ, ரொருமூட்டும்விட்டு மானமமென்னைக்கு மோதுமினே. (51)

மையாடிகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ் செந்தீ, யையாவின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துள்ளே, மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும், பொய்யாய்ப் பழங்கதையாய்க்கனவாய்மெல்லப் போனதுவே, (52)

ஆயாய்ப்பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற், போயாகிலு முண்மையைத் தெரிந்தாயில்லை பூகலத்தில், வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப் பேயாய்விழிக்கின்றனை மன்மேலென்ன பித்துனக்கே. (53)

அடியாருறவு மரன்பூசைநேசமு மன்புமன்றிப் படிமீதில்வேறு பயனுளதோபங்கயன்வகுத்த குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குபக்கலங்கள், தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே. (54)

ஆங்காரப்பொக்கசங் கோபக்களஞ்சிய மாணவந்தா, னீங்காவரண்மனை பொய்வைத்த கூடம்வின்னீடிவளர் தேங்கார்பெருமதிற் காமவிலாச மித்தே

கங்கந்தல், பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம்
பலிப்பதுவே. (55)

ஒழியாப்பிறவி யெடுத்தேங்கியேங்கி யுழன்றநெஞ்சே, அழியாப்பதவிக் கவுடதங்கேட்டி யருந்தியனை, மழுமான்கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி, விழியாற் புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்றே. (56)

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவாமிந் நாட்டிலுண்டோ,பேய்க்கொருஞானம் பிடிபடுமோ பெருங்காஞ்சிரங்கா, யாக்குவாரா தருந்துவாராது போலுடம்பு, திக்கிரையாவதல்லா லேதுக்காமினைச் செப்புமினே. (57)

கச்சிற்கிடக்குங் கனதனத்திற்படைக் கண்கள்பட்டே, இச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சேயிமவான்பயந்த,பச்சைப்பசுங்கொடி யுண்ணுமுலைபங்கர் பாதத்திலே, தைச்சுக்கிடமான மேயொருகாலுந்தவறில்லையே. (58)

மானார்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங், கோனாகியென்னைக் குடியேற்றுக் கொண்டனன் குற்றமில்லை, போனாலும்பேருந் தாலுநற்பேரிது பொய்யன்றுகாணுனுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே. (59)

சற்றாகிலுந்தன்னைத் தானறியாய்தனை யாய்ந்தவரை, யுற்றிலுமுரைக் கப்பொருந்தாயுனக் கானந்தில், பற்றுப்குருவைப் பணியாய்பரத்தையர் பாலிற்சென்றேறன் பெற்றாய்மடநெஞ்ச மேயுனைப்போனில்லை பித்தனுமே. (60)

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையறப், புளியிட்டசெம்மையும் போற்றுகிறேனுயர் பொன்னெனவே யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருத்துவ துண்மையென்று வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும் வேண்டிலனே. (61)

தாயாருக்குத் தகனகிரியை செய்கையிற் பாடிய வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஐயிரண்டுதிங்களா யங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலைத்தந்தாளை
யெப்பிறப்பிற்காண்பே னினி. (1)

முந்தித்தவங்கிடந்து முந்நூறுநாட்சுமந்து
யந்திபகலாச்சிவனை யாதரித்துத் - தொந்திச்
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (2)

வட்டிலிலுந்தொட்டிலிலு மார்மேலுந்தோள்மேலுங்
கட்டிலிலும்வைத்தென்னை காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (3)

நொந்துசுமந்துபெற்று நோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத் தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைகாப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன். (4)

அரிசியோநானிடுவே னாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாமல் - லுருசியுள்ள
தேனேயமிர்தமே செல்வத்திரவியப்பூ
மானேயெனவழைத்த வாய்க்கு. (5)

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன்முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயெனவழைத்த வாய்க்கு. (6)

விருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி

லன்னையிட்டதீ யடிவயற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே (7)

வெண்பா.

வேகுதேதியதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியே னையகோ - மாகக்
குருவிபறவாமற் கோதாட்டிபென்னைக்
கருதிவளர்த்தெடுத்த கை. (8)

வெந்தாளோசோணகிரி வித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னை மறந்தாளோ - சந்ததமு
முன்னையேநோக்கி யுகந்துவரங்கிடந்தென
றன்னையேயீன்றெடுத்த தாய். (9)

வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
வெல்லோரும்வாருங்க ளேதென்றிரங்காம
லெல்லாஞ்சிவமயமே யாம். (10)

மென்றுவிழுங்கி விடாய்கழிக்கநீர்தேட
லொன்றுவிடியுமெனக் கென்கோவே - நன்றி
கருதார்புரமூன்றுங் கட்டழலாற்செற்ற
மருதாவென்சந்நிதிக்கே வந்து. (1)

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதே பேதைமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதே கண். (2)

தோடவிழும்பூங்கோதைத் தோகையுமையிப்போது
தேடினவர்போய்விட்டார் தேறியிரு - நாடிநீ
யென்னைநினைத்தா லிடுப்பிலுதைப்பேனே
னுன்னை நினைத்தா னுதை (3)

வாசற்படிகடந்துவாராதபிச்சைக்கிங்
காசைபடுவதில்லையண்ணலே-யாசைதனைப்
* பட்டிறந்தகாலமெல்லாம்போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச்சொல். (4)

கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழகியதாங்-தொண்
ருடலுறுகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு. (5)

ஓடுவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன்-கடுவருந்துந்
தேவாதிதேவன்றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி. (6)

வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர்-பூவுலகில்
ஈதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோர்
ஓதுந்திருவொற்றியூர். (7)

நச்சரவம்பூண்டானை நன்றாய்த்தொழுவதுவு
மிச்சையிலேதானங்கிருப்பதுவும்-பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும்வந்திருவாயிலிலே
தூங்குவதுந்தானேசுகம். (8)

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன்-பெருக்க
வழைத்தாலும்போகேனரனேயென்றேக-
மிளைத்தாலும்போகேனினி. (9)

விட்டுவிடப்போகுதுயிர்விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகிறார்சுற்றத்தார்-பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனையேற்றுங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவேசுகம். (10)

* "பட்டிருந்த" என்றும்பாடம்.

ஆவியொடுகாய மழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம் படையாதே - மேவியசீர்
வித்தாரமுங்கடும்பும் வேண்டாமட நெஞ்சே
செத்தாரைப்போலே திரி. 11

ஆரூரரிங்கிருக்க வவ்வூர்த்திருநாளென்
றூரூர்கடோறு முழலுவீர் - நேரே
யுளக்குறிப்பைநாடாத வூமர்காணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடுவீர். 12

எத்தனையூரெத்தனை வீடெத்தனை தாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்க வேனென்றே - நித்த
மெனக்குக்களையாற்றாயே கம்பாகம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ. 13

மண்ணுந்தணலாற வானும்புகையாற
வெண்ணரியதாயு மிளைப்பாறப் - பண்ணுமயன்
கைபாறவுமடியேன் காலாறவுங்கண்பா
ரையா திருவையாறு. 14

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பைநம்பி யிருப்பரோநெஞ்சகமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்-சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண் மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக் கண்டு. 15

மேலுமிருக்கவிரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சிந்தையேகால்கைக்குக் [ட்டவுடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப்ப
சட்டையிட்டுச் சுட்டுவிடக்கண்டு. 16

ஒன்பதுவாய்த்தோற்பைக் கொருநாளைப்போலவே
யன்புவைத்துநெஞ்சே யலைந்தாயே - வன்கழுக்க
டத்தித்தத்திச்சட்டைத் தட்டிக்கட்டிப்பிட்டுக்
கத்திக்குத்தித் தின்னக்கண்டு. 17

இன்னம்பிறக்க விசைவையோநெஞ்சமே
மன்னரிவரென்றிருந்து வாழ்ந்தவரை - முன்னே

மெரிந்தகட்டைமீதி லிணைக்கோவணத்தை 18
யுரிந்துருட்டிப்போட்டது கண்டு.

முதற்சங்கமுதூட்டு மொய்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்கு பூட்டுங் - கடைச்சங்க
மாம்போததுவூது மம்மட்டோவிம்மட்டோ 19
நாம்பூமிவாழ்ந்த நலம்.

பொய்யையொழியாய் புலாலைவிடாய்காளத்தி
யையரையெண்ணாயறஞ்செய்யாய் - வெய்ய
சினமேயொழியாய் திருவெழுத்தைந்தோதாய் 20
மனமேயுனக்கென்ன மாண்பு.

*எருவாய்க்கிருவிரன்மே லேறுபுழுகூட்டுக்
கருவாய்க்கோகண்கலக்கப் பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலே செத்துக்கிடந்தாயே 21
நீரோடுந்தாரைக்கே நீ.

மாதாவுடல்சலித்தாள் வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்து விட்டானே - நாதா
விருப்பையூர்வாழ்சிவனே யின்னமோரன்னை 22
கருப்பையூர் வாராமற்கா.

அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா - மெத்தப்
பசிக்குதையாபாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி 23
யிசிக்குதையாகாரோணரே.

எத்தனைநாள்கூடி யெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்ப தல்லவோ - வித்தகனார்
காலைப்பிடித்துமெள்ளக் கங்குல்பகலற்றிடத்தே
மேலைக் குடியிருப்போமே.

எச்சிலென்றுசொல்லி யிதமகிதம்பேசாதீர்
யெச்சிலிருக்கு மிடமறியீ - ரெச்சிறனை
யுய்த்திருந்துபார்த்தா லொருமைவெளிப்படும்பின் 25
சித்த நிராமயமாமே.

---

*எருவாய் - குதம்.

காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னே யூரார்சுடுமுன்னே 26
குற்றாலத்தானையே கூறு.

எத்தனைபேர்நட்டகுழி யெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபேர்பற்றி யிழுத்தவிதழ் - நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மடமாதாரை விட் 27
டுய்யடாவுய்யடா வுய்.

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந்தீங்கினை யுன்னாதே -பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்ப நாய்நரிகள்பேய்கழுகு 28
தம்மதென்றுதாமிருக்குந் தான்.

எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப்பட்டாலும்
முத்தர்மனமிருக்கு மோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளையாடி யிருகைவீசிவந்தாலுந் 29
தாதிமனநீர்க்குடத்தே தான்.

மாலைப்பொழுதி *னறு மஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினக்கிட்டு விழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள் பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள் பின்.

முற்றிற்று.

உடற்கூற்றுவண்ணம்.

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தான தனந்த
தந்ததன தான தனதானா—

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து—

---

* நறுமஞ்சள் - பரிமளமுள்ளமஞ்சள்.

பனியிலோர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—
உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர்தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடிபாலரொ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே. (க)

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—
மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர்தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—
மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

மனதுபொரும லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—
ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—
வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே. (உ)
வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமல்மொழிந்து—
துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சு முலர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—
தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சு முலைந்துமருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து—
மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வினி லாதினிநின்ற—

கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிக்ஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—
நெஞ்சுதடுமாறிவரு நேரமே. (௫)

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிரண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—
வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும்வந்து குனிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—
பழையவர்காணு மெனுமயலார்கள்
பஞ்சுபரந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணவேக விசாரியுமென்று—
பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகில்தொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—
வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர் குனிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—
விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்து முறிந்துநிணங்க
ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறு மிலாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே

உடற்கூற்றுவயண்ணம்முற்றிற்று.

ஜெகத்பிரகாசம் பிரஸ், கோமளீவரன்பேட்டை சென்னை.